**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE  DHARMAPURI**

O.S No. 214 of 2022

Deposition of   P.W.1

Name of the Witness:  திருமதி.வடிவி

Date : 03.11.2025

**குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியாது. என்னுடன் பிறந்தவர்கள் 4 சகோதரிகள், 1 சகோதரர். என் அப்பா எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் தாத்தா பெயர் கந்தேகவுண்டர். என் தாத்தாவிற்கு என் அப்பா மட்டும் ஒரே வாரிசு. இதில் என்னுடைய அக்கா தீர்த்தி இறந்து விட்டார். அவருக்கு 1ம் வாதி மட்டும் தான் வாரிசு. என் அக்காவை தொட்டாம்பட்டியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். என் அக்காவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. 3ம் வாதியை ஊத்தங்கரை வட்டம், வேடப்பட்டியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். 4ம் வாதியை ஊத்தங்கரை வட்டம், மன்னாடிப்பட்டியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். 4ம் வாதி திருமணமாகி 40 வருடங்கள் இருக்கும். தாவா சொத்தின் பரப்பளவு 15 ஏக்கர் இருக்கும். தாவா சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியாது.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)